# பௌத்த மற்றும் முஸ்லிம் மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் பஞ்ச சீலத்தின் வகிபாகம் - இலங்கையை மையப்படுத்திய ஆய்வு

S. M. M. Mazahir[1], M.I. F. Afra[2]

[1&2]Department of Islamic Studies, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka.

**ஆய்வுச் சுருக்கம்** : *இன்று இலங்கை உட்பட பல்லின சமூகங்கள் வாழும் நாடுகளில் அச்சமூகங்களுக்கிடையில் பிரச்சினைகளும், சச்சரவுகளும், கலவரங்களும் இடம்பெற்று வருகின்றன. அவற்றைத் தீர்ப்பதற்கான பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும் அவை முறையாகப் பயனளித்ததாகத் தெரியவில்லை. இந்நிலையில் சமயங்களின் பொதுக் கோட்பாடுகளினூடாக இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதை இலக்காகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்கால இலங்கையில் பௌத்தர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான முறுகல் நிலையைத் தீர்ப்பதற்கு பௌத்த சமயம் வலியுறுத்தும் 'பஞ்ச சீலம்' எனும் ஒழுக்கவியல் போதனையை இஸ்லாமிய கண்ணோட்டத்தோடு ஒப்பிட்டு, இவ் ஆய்வுக் கட்டுரை விரிவாக நோக்குகின்றது. இதனூடாக 'பஞ்ச சீல'த்தினூடாக பௌத்த மற்றும் முஸ்லிம் மக்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் எனக் கண்டறியப்பட்டுள்ளதோடு, இறுதியில் இலங்கையில் அதனை அமுலாக்கம் செய்வதற்கான பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகளைக் கொண்டு, விவரண ஆய்வாக அமையப்பெற்றுள்ள இவ்வாய்வு, இலங்கை போன்ற பல்லின நாடுகளின் சமூக நல்லிணக்கத்திற்கு பஞ்ச சீலக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதானது குறிப்பாக பௌத்த மற்றும் முஸ்லிம்களின் உறவில் நம்பிக்கை, நாணயம், புரிந்துணர்வு, இணக்கப்பாடு, மனிதனை மதிக்கும் தன்மை, விட்டுக்கொடுப்பு என்பன வளருவதற்கான காரணமாக அமையும் என்பதனை முடிவாகக் கொண்டுள்ளது.*

**திறவுச் சொற்கள்:** பௌத்தம், இஸ்லாம், நல்லிணக்கம், பஞ்ச சீலம், இலங்கை

## 1. அறிமுகம்

சமயம் அல்லது மதம் என்பது புராதன காலத்திலிருந்து மிக முக்கியமான ஒன்றாகவே கருதப்பட்டு வருகின்றது, இதற்கு இன்றைய 21ஆம் நூற்றாண்டும் விதிவிலக்கானது அல்ல. சமயம் அல்லது மதம் என்ற சொல் விரிந்த பொருளுடையதாக காணப்படுவதோடு பெருந்தொகையான அம்சங்கள் இதனோடு தொடர்புபட்டுள்ளன.

உலகளாவிய மதங்கள் என்று பார்க்கும் போது கிறிஸ்தவ மதம் முதலிடத்திலும் (2.38 பில்லியன்) இரண்டாவது இடத்தில் இஸ்லாமும் (1.91 பில்லியன்), அடுத்ததாக இந்து சமயமும் (1.16 பில்லியன்), நான்காவது இடத்தில் பௌத்த மதமும் (507 மில்லியன்) காணப்படுகின்றது. (Religion by Country 2020–World Population Review, 2020).

மேற்படி தகவலின் அடிப்படையில் மிகப் பெரிய மதங்களாகவே இஸ்லாமும், பௌத்த சமயமும் நோக்கப்படுகின்றன. இவ்விரு மதங்களிலும் வேற்றுமையான கருத்துகள் காணப்படுவதோடு, இரு சமயங்களும் இணைந்து வாழக் கூடியதான கோட்பாடுகளும்

காணப்படுகின்றன. அவ்வாறு பௌத்த மற்றும் முஸ்லிம் மக்களை ஒற்றுமையாக, இணக்கமாக வாழ வழிவகுக்கக் கூடிய ஒரு கோட்பாடுதான், பௌத்த சமயத்தின் பஞ்ச சீலக் கோட்பாடாகும். பஞ்ச சீலம் பற்றிய கண்ணோட்டத்திற்கு முன்பு இரு சமயங்கள் பற்றிய புரிதல் அவசியமாகும்.

### 1.1 பௌத்த சமயம்:

பௌத்த மதம் இந்தியாவில் தோன்றியதோடு, இந்து சமயத்தின் ஒரு பிரிவாகவே அது நோக்கப்படுகின்றது. சிலர் பௌத்த மதத்தினை மதமாகவும், சிலர் இதனை தத்துவமாகவும் நோக்குகின்றனர். மேலும், புத்த தர்மம் நிறுவப்பட்டு மீண்டும் மறையலாம். அப்போது வேறொரு புத்தர் தோன்றுவார். இவ்வாறு 28 புத்தர்கள் தோன்றியுள்ளனர். இவர்கள் யாவரும் ஒரே தர்மத்தையும் ஒரே கொள்கையையும் போதித்து வந்தனர். இன்றுள்ள தர்மம் 28ஆவது புத்தரான கௌதம புத்தரால் போதிக்கப்பட்டதாகும். ஒருவர் முயற்சியின் மூலம் புத்த நிலையை அடைய முடியும். அவ்வாறானவர் 'போதி சத்துவர்' அல்லது 'விழையும் புத்தர்' எனப்படுவார் (மஸாஹிர், 2011).

பௌத்த சமயத்தைத் தோற்றுவித்த கௌதம புத்தரின் வாழ்க்கைக் காலம் கி.மு. 563-483 எனப் பொதுவாகக் கருதப்படுகின்றது. ஆயினும் தெற்கத்திய பௌத்தர்கள் (ஹீனயான பிரிவினர்), கி.மு. 624-544 எனக் கூறுகின்றனர். சீன பௌத்தர்களோ, கி.மு. 1000 என்கின்றனர் (அமீன், 2011).

புத்தர் பெருமானின் இயற்பெயர் சித்தார்த்த (அதன் பொருள் தனது நோக்கத்தை பூர்த்தி செய்தவர்), குடும்பப் பெயர் கௌதமர். அவர் ஞானமடைந்த பிறகு ஏற்பட்ட பெயரே புத்தர். பிற்காலத்தில் அவர் தம்மைப் பற்றிக் குறிப்பிடும் போது 'புத்தர்' என்றோ, 'ததாதகர்' என்றோ கூறிக் கொள்வது வழக்கம். புத்தர் என்றால், 'பூரண ஞானம்' பெற்றவர். ததாதகர் என்றால், 'முன்னோர் வழியில் செல்பவர்' என்று பொருள் (ராமஸ்வாமி, 2000). புத்தர் என்ற சமஸ்கிரதச் சொல் 'ஒளி பொருந்தியவர்', 'உணர்ந்தவர்' எனப் பொருள்படும் (Warren, 2012). இந்தச் சொல் 'புத்' என்ற அடிச் சொல்லிலிருந்து பிறந்தது. அதனுடைய சொற்பொருள் 'எழுப்புதல்', 'அறிதல்' என்பதாகும் (அமீன், 2011). அவர் ஸாக்கிய முனி (ஸாக்கிய குலத்தைச் சேர்ந்த அறிஞர்) என்றும் அழைக்கப்பட்டார் (நாகராஜன், 2019).

கௌதம புத்தர் ஸாக்கிய குலத்தைச் சேர்ந்த சுத்தோதனன் மற்றும் மாயாதேவியினுடைய மகன் ஆவார். குழந்தையைக் காண வந்தவர்களுள் ஒருவரான கௌதஞ்ஞர் (கௌடின்யன்) என்பவர் ''முதியவன், நோயாளி, துறவி, பிணம் என்ற நான்கையும் குழந்தை காண நேர்ந்தால் அது துறவறத்தை மேற்கொள்ளும்'' என்றார் (மஸாஹிர், 2011). இதனால் அரசன் சுத்தோதனன், கௌதம புத்தரை துன்பங்கள் அறியாதவராக வளர்த்தார் (Warren, 2012).

ஒரு நாள் புத்தர் தனது மாளிகைக்கு வெளியே சென்ற போது, ஒரு நோய்வாய்ப்பட்ட நபரைக் கண்டார் (இதன் போது நோயும் ஏழ்மையும் அவனை எவ்வாறெல்லாம் வாட்டி வதைக்கிறது என்பது பற்றி சிந்தித்தார்), அடுத்ததாக வயதான ஒரு பெண்ணைக் கண்டார் (இதன்போது


ISBN 978-624-5736-14-0

முதுமையின் துன்பத்தைக் கண்டார்), மூன்றாவதாக இறந்த மனிதன் தூக்கிச் செல்லப்படுவதனைக் கண்டார் (இதிலிருந்து மரணம் பற்றி புரிந்து கொண்டார்) (Warren, 2012). இறுதியாக காவி உடை அணிந்த ஒரு துறவியைக் கண்டார் (அமீன், 2011). இவையனைத்தும் மனிதனை துன்பப்படுத்துகிறது என்றார். இதனால், அவர் தனது 29ஆவது வயதில், அனைவரையும் விட்டுப் பிரிந்து, நாடு, நகரம், ஆட்சி அனைத்தையும் கைவிட்டு வனத்திற்குச் சென்று 6 வருடம் அருந்தவம் செய்தார்.

துன்பத்திற்கான தீர்வினை அடையும் நோக்குடன் வெவ்வேறு ஆசிரியரிடமிருந்தும் ஞானத்தை அடைய தனது பயணத்தைத் தொடங்கினார். அலைந்து திரிந்த பிறகு ஒரு போதியின் கீழ் (போதி மரம்) தியானித்திருக்கும் போது, வாழ்க்கையில் எதிர்மறையான நிலைமைகள் இருந்தாலும் துன்பத்தை நிர்வகிக்க முடியும் என்பதனை உணர்ந்தார். நிர்வாணம் அடைந்தார் (Warren, 2012).

அவருடைய பிரதான போதனைகளாக கீழ்வருவனவற்றைக் குறிப்பிட முடியும்.

நான்கு சத்தியங்கள்:

i. துக்க (Dukka); துக்கம் - அதாவது வாழ்க்கையில் துன்பம் தவிர்க்க முடியாதது. வாழ்க்கையானது துன்பம், வேதனை, நோய் என்பவற்றால் நிறைந்தது.

ii. ஸமுதய (Samudaya); துக்க உற்பத்தி – துன்பத்திற்குக் காரணம் அவா, ஏங்குதல் என்று இது குறிப்பிடுகின்றது. செல்வம் திரட்டவும், இன்பங்களை அடையவும், உடைமைகளை பெருக்கிக் கொள்ளவும் மனிதன் ஆசைப்படுகிறான். இவை அவனுக்கு மகிழ்ச்சியைத் தருமென்று நம்புகிறான். ஆனால் அவனுடைய வாழ்க்கை தடம்புரண்டு விடுகின்றது.

iii. நிரோத (Nirodha); துக்க நீக்கம் - துக்கத்தை நிர்வகிக்க முடியும் என்று மூன்றாவது உயர் சத்தியம் கூறுகின்றது.

iv. மக்க (Magga); மார்க்கம் துன்பத்தை வெற்றி கொள்வதற்கான 8 வழி அல்லது பாதை பற்றி கூறுகின்றது. அதாவது, நிர்வாணத்துக்கு செல்லக் கூடிய அஷ்டாங்க மார்க்கம் பற்றி கௌதம புத்தர் வலியுறுத்தினார் (மஸாஹிர் மற்றும் அப்ரா, 2021).

மேலும் உயிர்கள் பிறந்தும் இறந்தும், பிணி, மூப்பு முதலியவற்றிற்குட்பட்டும் துன்புறுகின்றன. இத்துன்பங்களினின்றும் நிரந்தரமாக விடுபட்ட நிலையே நிர்வாணம் எனப்படும். இந்நிர்வாணம் தொடர்பான விடயங்கள் மற்றும் மனிதன் தனது பிறவியில் மேற்கொள்ளும் செயல்களுக்கேற்பவே அவனது அடுத்த பிறவி அமைகிறது எனக் கூறுகின்ற கர்மம் தொடர்பான கொள்கைகள் பற்றியும் அவர் விளக்கியுள்ளார். அத்தோடு மனிதன் ஏனைய உயிரினங்களோடும் நிம்மதியாக வாழக்கூடிய பஞ்ச சீலம் தொடர்பான விடயங்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இப்பஞ்ச சீலக் கொள்கையினை அடிப்படையாகக் கொண்டே இவ்வாய்வு அமைந்துள்ளது.

**1.2 இஸ்லாம்:**

இஸ்லாம் முழு அகிலத்திற்கும் அருளப்பட்ட சர்வதேச தன்மை கொண்ட மார்க்கமாகும். இது குறித்த தேசத்திற்கு அல்லது குறித்த இனத்திற்கு அருளப்பட்டதொன்றல்ல (சர்ஜுன், ருஷானா, 2018). ஸலாம் என்ற மூல வார்த்தையிலிருந்து பிறந்ததுதான் இஸ்லாம். இது ‘ஸில்ம்’ எனும் அரபு மூலத்திலிருந்து பெறப்பட்டது (ஜாகிர் நாயக், 2011). அதனுடைய பொருள் சாந்தி, சமாதானம் என்பதாகும். ‘ஸில்ம்’ என்பதன் பொருள்: ஒருவன் தன்னுடைய விருப்பத்தை அல்லாஹ்வாகிய, சர்வவல்லமை பொருந்திய இறைவனுக்கு அடிபணியச் செய்வதாகும். விரிவாகக் கூறுவதாயின், இறைவனின் கலாம் ஆகிய அல்குர்ஆனின் சட்டதிட்டங்களுக்கும், நபிகளாரின் சுன்னாவுக்கும் அடிபணிவதனூடாக இறைவனின் விருப்பத்திற்கு கட்டுப்பட்டு நடப்பதாகும். எவன் ஒருவன் தன்னை முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணித்து, அடிபணிந்து மனதில் சாந்தியும் சமாதானமும் பெறுகிறானோ அவனுக்குப் பெயர் தான் முஸ்லிம்.

மனிதன் இஸ்லாமிய அடிப்படையில் வாழ்வதற்காக அவன் பிரதானமாக நம்பிக்கை கொள்ள வேண்டிய விடயங்களும் அவர்கள் செய்ய வேண்டிய கட்டாயக் கடமைகளும் அல்குர்ஆன் மற்றும் நபி (ஸல்) அவர்களினூடாக விவரிக்கப்பட்டுள்ளன. இவற்றை நம்புவதோடு பின்பற்றி நடப்பவனே உண்மையான மு.்.மின் ஆவான்.

அடிப்படை நம்பிக்கைகள்:

i. அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை – (கடவுள் ஒருவனே)
ii. அவனுடைய மலக்குகள் மீதான நம்பிக்கை
iii. அவனுடைய வேதங்கள் மீதான நம்பிக்கை
iv. அவனுடைய தூதர்கள் மீதான நம்பிக்கை
v. தீர்ப்பு வழங்கப்படும் மறுமை நாள் மீதான நம்பிக்கை
vi. நன்மையும் தீமையும் அவனுடைய (அல்லாஹ்வின்) விதிப்படி நடக்கின்றன என்னும், கழா கத்ர் மீதான நம்பிக்கை (Salleh, 2015; Ameen, 2012).

ஐம்பெரும் அடிப்படைக் கடமைகள்:

‘‘ஷஹாதாஹ்’’– ‘வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வேயன்றி வேறுயாருமில்லை என்றும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் உறுதியாக நம்புதல், ‘‘இகாமதுஸ் ஸலாஹ்’’ – ‘தொழுகையை நிலைநிறுத்துதல்.’, ‘‘ஸகாத்’’- ஸகாத் வழங்குதல், ரமழானில் நோன்பு நோற்றல். ‘‘ஹஜ்’’, மக்காவுக்கு புனிதப்பயணம் மேற்கொள்ளுதல். (Salleh, 2015; Ameen 2012) ஆகியனவாகும்.

இஸ்லாத்தில் கடவுட் கொள்கை ஏக இறைவன் ஒருவன் என்று கூறும் அதே வேளை, மனிதன் இறைவனுக்காக என்று மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளும் (இபாதத்) இறைவணக்கமாக நோக்கப்படுகின்றது.

### 1.3 பஞ்ச சீலம்:

உலகில் பெரும்பாலான மதங்கள் நன்நடத்தை அல்லது நல்லொழுக்கத்தையே போதிக்கின்றன. மதங்கள் தார்மீக ரீதியாக நல்லனவற்றை ஆதரிப்பதோடு, ஒட்டுமொத்த சமூகத்திற்கும் தீங்கு விளைவிக்கக் கூடிய அனைத்தையும் தடை செய்கின்றன. இந்த அடிப்படையில் பௌத்த சமயத்தில் காணப்படும் நல்லொழுக்க, தார்மீகக் கொள்கைதான் பஞ்ச சீலம் ஆகும். இது ஐந்து நெறிமுறைகள் அல்லது ஐந்து நல்லொழுக்கம் என அழைக்கப்படுகின்றது. இது பிரதானமாக இல்லத்தார் கடைபிடிக்க வேண்டிய நல்லொழுக்கமாகக் காணப்படுகின்றது. ஒரு சமூகத்தின் சீரான நடைமுறைக்கு இத்தார்மீகக் கட்டளையைப் பின்பற்ற வேண்டும்.

அவையாவன:

கொலை செய்வதனைத் தவிர்ப்பது, திருடுவதனை விட்டு விலகி இருப்பது, பாலியல் துஷ்பிரயோகத்திலிருந்து விலகியிருப்பது, பொய் சொல்லாமலிருப்பது, போதைப் பொருட்களை தவிர்ப்பது என்பனவாகும்.

கொலை செய்வதனைத் தவிர்ப்பதான கட்டளை மற்றவரின் வாழ்க்கையை மதிக்க வழிவகுக்கின்றது. திருடுவதைத் தவிர்ப்பது மற்றவரின் சொத்துகளுக்கான மரியாதைக்கு இட்டுச் செல்கின்றது. பாலியல் துஷ்பிரயோகத்திலிருந்து விலகி இருப்பதான கட்டளை பெண்களின் கௌரவத்தை மதிக்க வழிவகுக்கின்றது. பொய்யிலிருந்து விலகுவதான கட்டளை நேர்மையாக வாழ வழிசெய்கின்றது. மது அருந்துவதைத் தவிர்ப்பதானது, தெளிவான மனதைத் தருகின்றது. அது மாத்திரமன்றி பணத்திற்கான கௌரவம், தனது சொந்த கௌரவம் என்பவற்றிற்கு வழிவகுக்கின்றது.

இவ் ஐந்து கட்டளைகளும் ஒரு மனிதனை ஒழுக்கமாக மாற்றுகிறது. இது மனிதனின் ஆளுமை வளர்ச்சிக்கு மிக முக்கியமான ஒன்றாகவும் காணப்படுகினறது.

## 2. ஆய்வு நோக்கம்

பஞ்ச சீலம் மற்றும் இஸ்லாத்தில் குறிப்பிடும் அவை தொடர்பான விடயங்களைக் கருத்திற் கொண்டு இலங்கையில் வாழும் பௌத்தர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியுமா எனப் பரிசீலித்தல்.

## 3. ஆய்வு முறைமை

இவ் ஆய்வானது பண்புரீதியாக மேற்கொள்ளப்பட்டுள்ள விவரண ஒப்பீட்டாய்வாக உள்ளது. இதற்குரிய தகவல்கள் இரண்டாம் நிலைத்தரவு மூலங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன.

இரண்டாம் நிலைத்தரவு மூலங்கள்:

இவ் ஆய்வுக்குத் தேவையான இரண்டாம் நிலைத் தரவு மூலங்களாக, இஸ்லாம் மற்றும் பௌத்தமதம் தொடர்பாக வெளிவந்துள்ள நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், இணையத்தள வெளியீடுகள், பத்திரிகை ஆக்கங்கள், ஒளி நாடாக்கள் என்பன மீளாய்வுக்குட்படுத்தி


ISBN 978-624-5736-14-0

பெறப்படவுள்ளன. உள்ளடக்கப் பகுப்பாய்வினைப் பயன்படுத்தி ஒளி நடாத் தரவுகள் பெறப்பட்டன.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாம் நிலைத்தரவுகளிலிருந்து தகவல்கள் தனித்தனியாக தொகுக்கப்பட்டு, பகுப்பாய்வுக்கு உட்படுத்தி, முடிவுகள் பெறப்பட்டுள்ளன. அவை விவரணரீதியில் முன்வைக்கப்பட்டுள்ளன.

**4. இலக்கியமீளாய்வு**

எமது ஆய்வுத் தலைப்போடு தொடர்பான இலக்கியங்களுள் மிக முக்கியமானவை இங்கு தரப்பட்டுள்ளன

**C.M.A. Ameen என்பவரினால் எழுதப்பட்ட Hinduism, Buddhism and Islam - A Comparative Study** எனும் தமிழ் புத்தகத்தில் மூன்று மதங்கள் தொடர்பான அறிமுகம், அவற்றின் கோட்பாடுகளில் காணப்படும் ஒற்றுமை, வேற்றுமை என்பன தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. என்றாலும் பஞ்சசீலக் கொள்கை தொடர்பாக இஸ்லாம் ஏற்றுக் கொள்கிறது என்று மாத்திரமே குறிப்பிட்டுள்ளாரே தவிர ஆழமாக இப்புத்தகத்தில் குறிப்பிடப்படவில்லை. பஞ்சசீலக் கொள்கை தொடர்பான ஒற்றுமை வேற்றுமை என்பன தொடர்பாகவும் எதனையும் குறிப்பிடப்படவில்லை.

**Phattharachai Uthaphun** என்பவரினுடைய ***A Comparative Study of Sila (The five Precepts) in Theravada Buddhism and Jainism*** எனும் ஆங்கில ஆய்வுக் கட்டுரையில், சீலம் என்றால் என்ன?, சொல்லியல் விளக்கம், அதனுள் உள்ளடங்குகின்றவை, ஐந்து கட்டளைகள் பற்றிய விளக்கம், ஜைன மதத்தில் பஞ்ச சீலம் பற்றிய நிலைப்பாடு, இரண்டிற்குமிடையிலான ஒப்பீடு மற்றும் அவ்வாய்வினுடைய முடிவுகள், பஞ்ச சீலத்தினை பின்பற்றுவதால் ஏற்படும் நன்மைகள் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.

**Asmir Riyaz** எழுதிய ***Buddhist Ethics of Pancha Shila; A solution of present day and future problems*** எனும் ஆங்கில ஆய்வுக் கட்டுரையில், பஞ்ச சீலம் பற்றிய அறிமுகம், பெரும்பாலான மதங்கள் இக்கொள்கையை ஏற்றுக் கொண்டுள்ளது என குறிப்பிட்டுள்ளது. அத்தோடு, பஞ்ச சீலத்தில் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு ஒழுக்கம் பற்றிய விரிவான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

**Ven. Nayanika** எழுதிய ***The Buddhist Approach to Establish Peace through Five Precepts*** எனும் ஆங்கில ஆய்வுக் கட்டுரையில், பஞ்ச சீலம் பற்றிய அறிமுகம், அதன் ஒவ்வொரு ஒழுக்கமும் எவ்வாறு சமாதானத்திற்கு வழிவகுக்குகின்றது, இதனைப் பின்பற்றுவதால் ஏற்படக் கூடிய நன்மைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன.

**Willing Buddhist Centre வெளியிட்டிருக்கும் The five Precepts Training Principles** எனும் தொகுப்பில் பஞ்ச சீலங்கள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இதிலும் இஸ்லாமிய கொள்கை என்ன கூறுகிறது என்பது தொடர்பாக குறிப்பிடப்படவில்லை.

**Thanisssaro Bhikkhu எழுதிய The Five Precepts. Panca Sila** எனும் ஆங்கிலக் கட்டுரையில் பஞ்ச சீலங்கள் எவை என்றும் அவை தொடர்பான சில குறிப்பிட்ட விடயங்களும், புத்தா, தம்மா, சங்கா என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கூறப்பட்டுள்ளது. இது தனியாக பௌத்த சமயத்தின் நிலைப்பாட்டினையே குறிப்பிடுகின்றதே தவிர இஸ்லாத்தோடு ஒப்பிட்டுக் குறிப்பிடப்படவில்லை.

மேற்படி குறிப்பிடப்பட்டுள்ளவை ஒரு சில இலக்கிய மீளாய்வுகளாகும். இவ் இலக்கிய மீளாய்வுகள் பஞ்ச சீலம் பற்றி குறிப்பிடுகின்றதே தவிர இஸ்லாத்தில் பஞ்ச சீலத்தின் நிலைப்பாடு, மற்றும் இலங்கையில் பௌத்த மற்றும் முஸ்லிம்களின் நல்லிணக்கத்திற்கு எவ்வாறு அவற்றைப் பயன்படுத்துவது என்பது தொடர்பான எவ்விதமான ஆய்வுகளும் எமது தேடலின் முடிவில் அறியப்படவில்லை. இதனை ஆய்வு இடைவெளியாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 5. கலந்துரையாடலும் கண்டுபிடிப்புகளும்

பஞ்ச சீலம் ஊடாக இலங்கையில் பௌத்த மற்றும் இஸ்லாத்தை பின்பற்றுபவர்களிடையே எவ்வாறு நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்' என ஆராயும் போது கீழ்வரும் விடயங்கள் முக்கியமானவை.

**i. முதல் கட்டளை - கொலை செய்யாமை**

பஞ்ச சீலத்தில், கொல்வதைத் தவிர்ப்பது முதல் கட்டளையாகும். அதாவது பௌத்த சமயம் ஒரு நபரை அழிப்பதையோ, அல்லது அழிக்க அனுமதிப்பதையோ தடைசெய்கிறது. இக்கட்டளை பௌத்த மற்றும் முஸ்லிம் நல்லிணக்கத்திற்கு பெரும் உந்து சக்தியாக உள்ளது எனலாம்.

இக்கட்டளையில், அனைத்து உயிரினங்களும் உள்ளடங்கப்படுகின்றது. வாழ்வதற்கு பூச்சி முதல் மனிதன் வரை உரிமை கொண்டுள்ளான் எனப் போதிக்கிறது. இது பாலி மொழியில் 'பானாதிபதா விராட்டி' என அழைக்கப்படுகிறது.

முதல்கட்டளையை ஏற்றுக் கொள்வதன் மூலம் மனிதன் உட்பட எந்த ஒரு உயிரினத்தையும் வேண்டுமென்றே கொலை செய்வதனைத் தவிர்க்க முடியும். இதன் மூலம் உயிருள்ள, உயிரற்ற அனைத்திற்கும் மரியாதை செய்யமுடியும். அஹிம்சையான முறை என்பது வன்முறைகளிலிருந்து விலகுவது மட்டுமல்ல, அனைவருக்கும் அன்பையும் கருணையையும் வழங்குவதாகும்.
''எந்தவொரு உயிரினத்தின் வாழ்க்கையையும் அழிப்பவர் தனது அடுத்த பிறவியில் தனது மரணத்தை நல்ல முறையில் சந்திக்க முடியாது.'' (தம்மபதம்) ''எல்லோரும் தண்டத்துக்கு நடுங்குகின்றனர். எல்லாருக்கும் உயிர்வாழ்வு உவப்புக்குரியதே! தன்னை உவமையாக்கி ஒருவனும் கொல்லவும் கொல்விக்கவும் கூடாது.'' (தம்மபதம்)


ISBN 978-624-5736-14-0

இக்கட்டளை பல்லின மக்கள் வாழும் சமூகத்திற்கு சிறந்த வழிகாட்டியாக உள்ளது. குறிப்பாக பௌத்த மற்றும் முஸ்லிம்கள் வாழும் இலங்கை போன்ற தேசத்திற்கு இது மிகவும் தேவையாக உள்ளது. ஏனெனில் இன்று முஸ்லிம் மற்றும் பௌத்தர்களிடையே கசப்பான அனுபவங்களே மிக அண்மைக்காலத்தில் அதிகமாக இடம்பெற்றுள்ளன.

இஸ்லாமும் இக்கட்டளையை சிறு மாற்றங்களோடு ஏற்றுக்கொள்கிறது. இக்கொள்கையில் பௌத்த மற்றும் முஸ்லிம் உறவுகளிடையே கருத்துமுரண்பாடு தோன்றுவது பிராணிகளை அறுக்கும் விடயத்தில்தான். எனினும் இவ்வாய்வு அதற்கான விளக்கங்களை இங்கு குறிப்பிடவில்லை. எனினும் இஸ்லாமும் பௌத்த மதத்தைப் போன்றே எந்தவொரு உயிரினத்தையும் அநியாயமாகக் கொல்வதனை வன்மையாகக் கண்டிக்கிறது.

"நிச்சயமாக எவரொருவர் கொலைக்குப் பதிலாகவோ, அல்லது பூமியில் எற்படும் குழப்பத்தைத் தவிர்ப்பதற்காகவோ அன்றி மற்றொருவரைக் கொலை செய்கிறாரோ அவர் மனிதர்கள் யாவரையும் கொலை செய்தவர் போலாவார். மேலும் எவரொருவர் அதனை (ஓர் ஆத்மாவை) வாழவைக்கறாரோ, அவர் மக்கள் யாவரையும் வாழவைத்தோரைப் போலாவார்......" (சூரா அல் மாயிதா: வசனம் 32). இவ்வாறு இஸ்லாம் ஒரு உயிரை வாழவைத்தவன் அனைத்து உயிர்களையும் வாழவைத்தவன் எனக் கூறி, அது உயர்ந்த அந்தஸ்தினை உயிர்களுக்கு வழங்கியுள்ளது.

உயிரினம் எனும் அடிப்படையில் இஸ்லாமும் சிறியது, பெரியது, மிருகம், தாவரம் எனப் பாகுபடுத்தவில்லை. அனைத்து உயிரினங்கள் மீதும் ஜீவகாருண்யமாக இருக்குமாறு அது கூறுகிறது.

கொல்லாமை எனும் கட்டளையானது, அனைத்து உயிரினங்களின் வாழ்க்கை உரிமைக்கான நல்லெண்ணம் மற்றும் மரியாதை என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது. இந்த கட்டளையை கடைபிடிப்பதன் மூலம் ஒருவர் இரக்கத்தையும் கருணையையும் வளர்க்க கற்றுக்கொள்கிறார். ஒருவர் மற்றவர்களின் துன்பத்தை ஒருவரின் சொந்தமாகக் கருதுகிறார். இவ்வாறு அவர் தன்னை வளப்படுத்திக்கொள்ளும் போது, தன்னோடு தன்னுடைய நாட்டில், தன்னுடைய சமூகத்தில் இருக்கும் இன்னொரு மத சகோதரனுக்கும் எக்காரணம் கொண்டும் அநியாயம் இழைப்பதற்கு முன்வரமாட்டான். இக்கட்டளைகளை ஏற்றுக்கொள்வதன் மூலம், இனப்படுகொலை, இனச்சுத்திகரிப்பு, கருக்கலைப்பு, சிசுக்கொலை போன்றவற்றை தவிர்த்து சுமுகமான வாழ்க்கையை வாழ முடியும்.

### ii. இரண்டாவது கட்டளை: கல்லாமை

பாலி மொழியில் "ஆதிந்நாதானா வேரமனி" என்று அழைக்கப்படுகிறது. 'ஆதின்னா' என்ற சொல்லுக்கு 'கொடுக்கப்படாதது' என்றும், 'அதனா' என்ற சொல்லுக்கு 'எடுத்துக்கொள்வது' என்றும் பொருள். இந்த விதிமுறையானது, தனக்கு சொந்தமில்லாத விஷயங்களை எடுத்துக் கொள்வது தொடர்பாக அறிவுறுத்துவதாகும்.

பஞ்ச சீலத்தின்படி பிறரின் சொத்து, மற்றவர்களின் சொத்து என்று தெரிந்திருந்தும் அதனை எடுப்பது, ஒழுக்கக் கேடான முறையில் திருடுதல், திருடப்பட்ட பொருட்கள் கொண்ட இடத்தில்

வேலை பார்ப்பது, ஒருவருடைய சொத்தை அகற்றுவது போன்ற ஐந்து விடயங்களும் ஒழுக்கக்கேடான செயலாகவே பார்க்கப்படுகின்றது.

திருட்டு தொடர்பாக தம்மபதம் பின்வருமாறு கூறுகிறது: "உலகில் தனக்குக் கொடுக்கப் படாத பொருள் நீண்டது, குறியது, சிறியது, பெரியது, நல்லது, கெட்டது, எதுவாயினும் அதனை ஏற்றுக் கொள்ளாதவன் எவனோ, அவனை நான் அந்தணன் என்பேன்" (தம்மபதம்)

இஸ்லாமும் திருட்டு தொடர்பான விடயத்தில் பஞ்ச சீலம் போன்றே ஒழுக்கக் கேடான செயல் என கூறுகிறது. இஸ்லாம் செல்வத்தையும் மனிதர்களின் உடைமைகளையும் மதிப்பதுடன் எக்காரணம் கொண்டும், எவராலும் ஆக்கிரமிப்புச் செய்யக்கூடாத புனிதமிகு உரிமையாக அதனை அங்கீகரித்துள்ளது. ஆகவேதான் திருட்டு, மோசடி, கொள்ளை, ஏமாற்று, வட்டி, சதி போன்றவற்றை இஸ்லாம் தடை செய்துள்ளது.

இஸ்லாத்தில் திருடுதல் பெரும் பாவமாக நோக்கப்படுகின்றது. "அநாதைகளிடம் அவர்களின் சொத்துக்களை நீங்கள் கொடுத்து விடுங்கள். நல்லதுக்குப் பதிலாக கெட்டதை மாற்றிவிடாதீர்கள். உங்களுடைய சொத்துகளுடன் சேர்த்து அவர்களுடைய சொத்துக்களை உண்ணாதீர்கள். நிச்சயமாக இது பெரும் பாவமாக இருக்கிறது. (சூரா அன்னிசா: வசனம் 2)

நபியவர்கள் செய்யக் கூடாது என வாங்கிய வாக்குறுதிகளில் ஒன்றாகும்.
"தன்னிடம் வருபவர்களிடம் நபியவர்கள் நீங்கள் அல்லாஹ்விற்கு இணைவைக்கக் கூடாது. திருடக் கூடாது, விபச்சாரம் செய்யக் கூடாது, குழந்தைகளைக் கொல்லக் கூடாது, அடுத்தவர் மீது எதையும் இட்டுக் கட்டிச் சொல்லக்கூடாது, நற்காரியங்களில் எனக்கு மாறு செய்யக் கூடாது என்று வாக்குறுதி வாங்கக் கூடியவர்களாக நபியவர்கள் இருந்தார்கள்." (அஹ்மத்)

இரண்டாவது கட்டளை, கொடுக்கப்படாதவற்றை எடுத்துக் கொள்ளக்கூடாது என்பது செல்வத்தையும் சொத்துக்களையும் வைத்திருப்பதற்கான மற்றவர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதைக் குறிக்கிறது. இரண்டாவது கட்டளையை அவதானிப்பதன் மூலம், ஒருவர் திருட்டு அல்லது மோசடி செய்வது போன்ற தவறான வழிமுறைகளின் மூலம் ஒருவரின் வாழ்வாதாரத்தை சம்பாதிப்பதைத் தவிர்க்கிறார். இந்த விதிமுறை பல்லின சமூகத்திடையே தாராள மனப்பான்மையை வளர்க்கிறது. இது தனிப்பட்ட மட்டத்தில் ஒருவரை சுயநலத்திலிருந்து விடுவிக்க உதவுகிறது, மேலும் ஒரு சமூக மட்டத்தில் சமூகத்தில் நட்பு மற்றும் ஒத்துழைப்புக்கு பங்களிக்கிறது. இதனால் இரு சமய மக்களும் தங்களுடைய வியாபாரங்களை பயமின்றி மேற்கொள்ள முடியும். மேலும் பல்லின சமூகம் கொண்ட எமது இலங்கை நாட்டிலும் திருட்டுக் குற்றங்கள் குறைவடையும். இதனால் மக்கள் நிம்மதியாக வாழ்வார்கள். நிம்மதி இருக்கக்கூடிய இடத்தில் குழப்பங்கள் ஏற்படுவது குறைவு.

### iii. மூன்றாவது கட்டளை: காமமின்மை

இது பௌத்த மற்றும் முஸ்லிம் உறவில் நேரடியாக தாக்கம் செலுத்தவில்லை என்றாலும், உறவின் இடைவெளிக்குக் காரணமாக அமைகிறது. அதாவது பெண்களை தவறான

கண்ணோட்டத்தில் பார்ப்பது, அல்லது பேசுவது இது தனித்தனியாக தங்களிடேயேயும், இரு மதங்களிடேயேயும் வன்முறைக்கு இட்டுச் சென்று சமூக சீர்கேட்டிற்கு வழிவகுக்கின்றது.

பௌத்த மதம் கட்டளை மூலம், தவறான உடலுறவிலிருந்து விலகுமாறு அறிவுறுத்துகிறது. பாலி மொழியில் இந்தக் கட்டளையானது 'காமேசு மிச்சகராவெரமனி' என்று அழைக்கப்படுகின்றது. காமா என்றால் 'ஆண்' அல்லது 'பெண்' மீதான காம ஈர்ப்பு என்று அழைக்கப்படுகின்றது. மிச்சகராமனி என்றால் 'தவறான நடத்தை' என்று பொருள்படும்.

காமத்தில் நுழையாது இருப்பவனாலேயே இன்பமாக இருக்க முடியும் என கூறுகிறது. ''மயக்கத்தில் நுழைய வேண்டாம். காம இன்பங்களை நாடி அணுக வேண்டாம். தெளிவோடும், உறுதியோடும் தியானம் செய்பவன் எல்லையற்ற இன்பத்தை அடைகிறார்.'' (தம்மபதம்).

இக்காமத்திலிருந்து விடுபட்டு சிறந்த வாழ்க்கை வாழ்வதற்கு துறவறத்தை வழியாக கூறுவதோடு, திருமணத்தையும் ஆதரிக்கிறது பௌத்தமதம். ''புண்ணியம் செய்ய விரைந்து செல்க. பாவத்தினின்று மனத்தை விலக்குக. புண்ணியம் செய்யப் பின் வாங்கினால், மனம் பாவத்தில் இன்பம் காண்கிறது.'' - இங்கு புண்ணியம் என்று திருமணத்தையே புத்தர் குறிப்பிட்டுள்ளார். (தம்மபதம்)

இஸ்லாமும் பாலியல் முறைகேட்டிலிருந்து விலகியிருக்குமாறு கூறுகிறது. அதனை நெருங்க வேண்டாம் எனப் பணிக்கிறது. ''நீங்கள் விபச்சாரத்தின் பால் நெருங்காதீர்கள்: நிச்சயமாக அது மானக்கேடானதாகும். மேலும் வேறு கேடுகளின் பக்கம் இழுத்துச் செல்லும் தீய வழியாகவும் இருக்கின்றது. (சூரா பனீ இஸ்ராயீல்: வசனம் 32).

முறையற்ற பாலியலின் பக்கம் நெருங்காமல் இருப்பதற்காகவே, இஸ்லாமும் திருமணத்தை அங்கீகரித்துள்ளது. ''நீங்கள் (அமைதி) ஆறுதல் பெறுவதற்குரிய துணையை உங்களில் இருந்தே உங்களுக்காகப் அவன் படைத்திருப்பதும் உங்களுக்கிடையே அன்பையும் கிருபையையும் ஏற்படுத்தி இருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும்'' (சூரா அர் ரூம்: வசனம் 21)

பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடக்கூடாது என்ற மூன்றாவது கட்டளையில் கற்பழிப்பு, விபச்சாரம், பாலியல் ரீதியான அனைத்து செயற்பாடுகளும் உள்ளடங்கும். இந்த விதிமுறை ஒருவரின் சொந்த மனைவியையும், மற்றவர்களின் மனைவியையும் மதிக்கக் கற்றுக்கொடுக்கிறது. அதாவது, பல்லின சமூகம் என்ற அடிப்படையில் சிங்கள பெண்களும், முஸ்லிம் பெண்களும் வாழக்கூடிய நிலை காணப்படுகிறது. இவ்வாறான சூழலில் இரு மதப் பெண்களையும் பெண்ணாக, கண்ணியம் கொடுத்துப் பார்க்க இக்கட்டளை வழி அமைக்கிறது.

மேலும், ஆன்மீக பயிற்சியில் மிக முக்கியத்துவம் வாய்ந்த சுய கட்டுப்பாட்டு நடைமுறையை ஊக்குவிக்கிறது. சில அறிஞர்களால் இது புலன்களைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பது என்றும், மற்றவர்களுக்குப் பிரியமான விஷயங்களை மீறுவது அல்லது மற்றவர்களின்


ISBN 978-624-5736-14-0

உணர்வுகளை வேண்டுமென்றே புண்படுத்துவதைத் தவிர்ப்பது என்பதையும் குறிக்கிறது. அவர் அவ்வாறு செய்தால், அவர் ஒழுக்கத்தை மீறியதாகக் கூறலாம்.
இன்று இணையத்தளங்களினூடக இவ்வாறான விடயங்கள் இடம்பெறுவதனை காணக்கூடியதாக உள்ளது.

**iv. நான்காவது கட்டளை: பொய் சொல்லாமை**

பல்லின சமூக ஒற்றுமைக்கு உண்மை பேசுவதும், பொய் சொல்லாமல் இருப்பதும் மிக முக்கியமானதொன்றாகும்.

பாலி மொழியில் இந்தக் கட்டளையானது, 'முசாவதா வேரமனி' என்று அழைக்கப்படுகின்றது. உண்மையை மறைப்பது அல்லது உண்மை அல்லாத ஒன்றை சொல்லும் செயலை உள்ளடக்கியது. ஒரு விடயத்தை மிகைப்படுத்தப்பட்ட மொழியில் மற்றொருவரை உண்மை என நம்பவைக்கும் விதம் பொய் என குறிக்கப்படுகின்றது.

பொய் பேசக் கூடியவன் செய்ய முடியாத பாவம் என்று ஒன்று இல்லை என தம்மபதம் குறிப்பிடுகிறது. "ஒன்றான தருமத்தைக் கடந்தவனுக்கு, பொய்யே பேசும் மனிதனுக்கு, பரலோகத்தை அவமதிப்பவனுக்கு, செய்யத்தகாத பாவமே இல்லை." (தம்மபதம்).

பொய் சொல்வது, தவிர்க்கப்பட வேண்டியதொன்றாக நோக்கப்படுகிறது. ஏனெனில் பொய்யானது மற்றவர்களுக்கு தீங்கு விளைவிப்பதோடு மட்டுமல்லாமல், பௌத்த மதத்தின் பார்வையில் உண்மையினுடைய பெறுமதியினையும் இழக்கச் செய்கிறது. ஒருவர் இன்னொருவரை ஏமாற்றும் போது உண்மையில் அவர் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கிறார்.

இஸ்லாமும் பொய் பேசுவதனை வன்மையாகக் கண்டிக்கிறது. பெரும்பாவங்களில் ஒன்றாகவே, இஸ்லாம் பொய்யுரைத்தலை நோக்குகிறது. "தவறான சிந்தனையை கைவிடுங்கள், ஏனெனில் தவறான சிந்தனைகளே மிகப்பெரிய பொய்மைக்கு வழிவகுக்கும்" என்று நபி (ஸல்) அறிவுறுத்தினார்கள். (புகாரி)

மேலும் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள், பொய் என்பது, ஒரு மு.்.மினிடம் இருக்கக் கூடாத ஒன்று. "ஒரு மு.்.மீனிடம் எல்லாத் தீமைகளும் இருக்கலாம். ஆனால் அவனிடம் பொய்யும், நேர்மையின்மையும் இருக்கக் கூடாது." (அஹ்மத்)

இவ்வாறு இஸ்லாமும் பொய்யினை பெரும் பாவமாக கருதுவதோடு, இதற்கு மாற்றமாக நபி (ஸல்) அவர்கள் உண்மையாளராக வாழ்ந்து காட்டியுள்ளார்கள். இதனாலாலேயே அன்றைய ஜாஹிலிய கால மக்கள் அவரை 'உண்மையாளர்' மற்றும் 'நம்பிக்கைக்குரியவர்' என அழைத்தனர்.

நான்காவது கட்டளையான பொய்களைச் சொல்லவோ அல்லது பொய்யை நாடவோ கூடாது என்பது சமூக வாழ்க்கையிலும் தனிநபர் நடவடிக்கைகளிலும் இருக்க வேண்டிய ஒரு முக்கிய காரணியாகும். இது சத்தியத்திற்கானது மற்றும் மரியாதைக்குரியது. சத்தியத்தை புறக்கணிப்பது

தீய செயல்களை ஊக்குவிக்க உதவும். ஆரம்ப கால பௌத்த மற்றும் முஸ்லிம் மக்களிடையே அந்நியோன்னியமான ஒரு உறவு இருந்ததற்கு முஸ்லிம்கள் அல்குர்ஆன் மற்றும் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றியதும், பௌத்தர்கள் புத்தர் அருளிய பஞ்ச சீலக் கொள்கையைப் பின்பற்றியதும் தான் காரணம் எனலாம். முஸ்லிம்கள் உண்மை பேசுவதால் பௌத்த மக்கள் முஸ்லிம்களை நம்புவர். தங்களுடைய கொடுக்கல் வாங்கல்களை முஸ்லிம்களோடு மேற்கொள்வர். அதே போன்று, பௌத்த மக்கள் பஞ்ச சீலம் கூறுவது போன்று பொய் சொல்லாது உண்மை கூறும் போது, முஸ்லிம்களுக்கு பௌத்த மக்கள் மீது நம்பிக்கை உருவாகும். அவர்களுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் சீராக இடம்பெறும். சமூக உறவுகளும் மேன்படும். இருபக்க சந்தேகங்களும் களையப்பெறும். அதன் மூலம் ஆரோக்கியமாக நல்லிணக்கம் கொண்ட சமூக அமைப்பொன்று உருவாகும்.

**v. ஐந்தாவது கட்டளை: மது அருந்தாமை**

மது என்பது வீட்டுக்கும், நாட்டுக்கும் கேடான ஒன்றாகும். ஒரு மனிதனின் உடலையும், உள்ளத்தையும், அறிவையும் மது, போதைப் பொருட்கள் பாதிக்கின்றன. மது தொடர்பான கட்டளை பாலி மொழியில் "சூரமேரயாமஜ்ஜப்பமத்தானா வெரமனி" என்று அழைக்கப்படுகின்றது.

"கள்ளும் சாராயமும் குடிப்பவனும் இந்த உலகத்திலேயே தனது வேரைப் பெயர்க்கிறான்." என தம்மபதம் கூறுகிறது.

ஐந்தாவது கட்டளையான மது அருந்தக் கூடாது எனும் கட்டளையை மீறி ஒருவன் மது அருந்துவானாயின் அவனுக்கு அது கீழ்வரும் ஆறு ஆபத்துகளுக்கு வழிவகுக்கின்றது என்று புத்தர் கூறினார். அவை முறையே பண விரயம், சண்டை அதிகரித்தல், நோய்க்கு காரணமாகுதல், தனக்கு இருக்கக் கூடிய நல்ல பெயரை இழத்தல், அநாகரீகமான நடத்தை வெளிப்படுதல், ஒருவருடைய ஞானத்தினை பலவீனப்படுத்துதல் (ரியாஸ், 2018: தம்மிக, 2009).

இஸ்லாமும் மது அருந்துவதனை தடைசெய்துள்ளது. தீமைகளின் தாயகமாக போதைப் பொருளை இஸ்லாம் நோக்குகின்றது. "குடி தீமைகள் அனைத்திற்கும் தாயாகும் என்றும், அல்லாஹ்வின் மீது ஆணையாக உண்மையான இறை நம்பிக்கையும் மது அருந்துதலும், ஒன்று சேராது: இரண்டில் ஒன்று மற்றொன்றை அப்புறப்படுத்திவிடும்." (நஸஈ).

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் பத்துப் பேர்களை சபித்தார்கள்.

i. மதுவைக் காய்ச்சுபவர் ii. அதைக் காய்ச்சுவதற்கு உதவுபவர் iii. அதைக் குடிப்பவர் iv. அதைப் புகட்டுகின்றவர் v. அதனைச் சுமந்து செல்பவர் vi. அதனைச் சுமந்து செல்ல ஏற்பாடு செய்பவர் vii. அதனை விற்பவர் viii. அதனை வாங்குபவர் ix. அதனைப் பரிசாகக் கொடுப்பவர் x. அதை விற்றுப் புசிப்பவர். (திர்மிதி) இதிலிருந்து எந்தளவு தூரம் இஸ்லாம் மது அருந்துவதனை தடை செய்கிறது என்பது புலனாகிறது.


ISBN 978-624-5736-14-0

அதே போன்று இஸ்லாம் போதைப் பொருள் குறைவாயினும், கூடுதலாயினும் அது ஹராமாகும் என்கின்றது. ''போதைப் பொருள் அனைத்தும் - குறைவாயினும், கூடுதலாயினும் ஹராமாகும்.'' (திர்மிதி, அபூதாவூத், நஸாஈ)

வளர்முக நாடுகள், வளர்ந்த நாடுகள் குறிப்பாக பல்லின சமூகம் வாழும் நாடுகளில் ஆல்கஹோல் மிகப் பெரும் பிரச்சினையாகும். மேற்கூறப்பட்ட கற்பழிப்பு, கொலை, திருட்டு, மற்றும் பொய் என்பவற்றுடன் ஆல்கஹோல் மிக நெருக்கமான தொடர்புடையது என உலகில் மேற்கொள்ளப்படும் பல ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. எல்லோரும் ஐந்தாவது கட்டளையை ஏற்றுப் பின்பற்றினால் நிகழ்கால மற்றும் எதிர்காலத்தினுடைய பல பிரச்சினைகள் தீர்க்கப்படும். அதே போன்று இலங்கை உட்பட பல்லின சமூகம் வாழும் நாடுகளில் பௌத்த மற்றும் முஸ்லிம் உறவுகளிடையே நல்லிணக்கம் உருவாகும்.

தனிப்பட்ட மட்டத்தில், போதைப் பொருட்களைத் தவிர்ப்பது நிதானத்தையும், பொறுப்புணர்வையும் பராமரிக்க உதவுகிறது. சமூக ரீதியாக, இது போதைப்பொருள் அல்லது போதைப்பொருளின் செல்வாக்கின் கீழ் எளிதில் நிகழக்கூடிய விபத்துகளைத் தடுக்க உதவுகிறது. இந்த தீங்கு விளைவிக்கும் பொருட்களின் செல்வாக்கின் கீழ் சமூகத்தில் பல குற்றங்கள் செய்யப்படுகின்றன. உதாரணமாக: இலங்கையில் திகண கலவர சம்பவத்திற்கு மூலக்காரணம், அவ் இளைஞன் மதுபானம் அருந்தி இருந்தான் என்பதாகும். இக்கட்டளையை பின்பற்றுவது என்பது இவ்வுலகையே மிக அழகிய இடமாக மாற்றும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

## 6. முடிவுரை

பௌத்த மற்றும் இஸ்லாம் சமயங்களுக்கிடையே கொள்கை ரீதியாக மாற்றங்கள் காணப்பட்ட போதிலும், பஞ்ச சீலம் எனும் கொள்கையில் சிறு சிறு மாற்றங்கள் இருப்பினும், ஒருமித்த கருத்தினையே கொண்டுள்ளது. இரு மதங்களிலும் மனிதன் மனிதனாகவும், இவ்வுலகில் ஆரோக்கியமாகவும் வாழவுமே போதனைகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றை பின்பற்றும் இலங்கை போன்ற பல்லின சமூக மக்களிடையே நம்பிக்கை, நாணயம், புரிந்துணர்வு, இணக்கப்பாடு, மனிதனை மதிக்கும் தன்மை, விட்டுக்கொடுப்பு என்பன வளரும் என்பதில் ஐயமில்லை.

## 7. பரிந்துரைகள்

இலங்கை உட்பட பல்லினத்தவர் வாழும் நாடுகளில் புரிந்துணர்வின்மை, மோதல்கள், இனவிரிசல், நம்பகத்தன்மையின்மை என்பன வளர்ந்துள்ளன. அவற்றுக்கு தீர்வாக பஞ்ச சீலம் காணப்படுகின்றன என்பது மேற்படி ஆய்வின் மூலம் தெளிவாகிறது. இவ்வாறு பல்லின சமுதாயத்தில் வாழும் மக்களிடையே பஞ்ச சீலத்தினூடாக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக வேண்டி ஆய்வார்களால் பின்வரும் பரிந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன.

- பஞ்ச சீலம் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தல்.

இன்று பௌத்த மற்றும் முஸ்லிம் உறவில் நல்லிணக்கமின்மைக்கு பஞ்ச சீலம் தொடர்பான தெளிவு படித்தவர்கள் முதல் பொது மக்கள் வரை தெளிவாக அறியாமை ஒரு காரணமாக உள்ளது. எனவே, பஞ்ச சீலம் தொடர்பான விழிப்புணர்வினை பாடசாலைகள் தொடங்கி பல்கலைக்கழகம் வரை விரிவாக்கம் செய்தல்.

- மத வழிபாட்டுத் தளங்களில் திறந்த உரையாடலுக்கு இடமளித்தல்.

பல்லின மக்கள் வாழக்கூடிய இடங்களில் காணப்படக்கூடிய இன முரண்பாடுகளுக்கு மதவழிபாட்டுத்தளங்களுக்குள் என்ன இடம்பெறுகின்றன என அறியாதிருப்பதும் பிழையான புரிதலும் ஒரு காரணமாகும். உதாரணமாக, இலங்கையை நோக்கினால் பெரும்பாலான பௌத்தர்கள் அறிவதில்லை. பள்ளிவாசலின் (மஸ்ஜித்) உள்ளே நடப்பவற்றை பௌத்தர்களும் விகாரையினுள்ளே நடப்பவற்றை முஸ்லிம்களும் தெரிந்து கொள்ளும் போது வீணான சந்தேகங்கள் களையப்பட்டு, புரிந்துணர்வு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமுள்ளன. எனவே, இரு தரப்பாருக்கும் அடுத்த தரப்பாரினுடைய வணக்கஸ்தலத்திற்குச் செல்லவும், திறந்த கலந்துரையாடல்களில் ஈடுபடவும், பொது வேலைத்திட்டங்களில் ஒன்றிணைந்து செயற்படவும் முறையான ஒரு வேலைத்திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். இந்நிகழ்ச்சித் திட்டத்தில் இரு பக்க மதகுருமார்களும் கணிசமாகப் பங்களிப்புச் செய்யலாம்.

- சமூகவலைத் தளங்களைப் பயன்படுத்துதல்.

இன்றைய மனிதன் சமூகவலைத் தளங்களுக்குள் தன் வாழ்வியலை அமைத்துள்ளதால் அவற்றின் செல்வாக்கு மிக அதிகமாகக் காணப்படுகின்றது. பல்வேறு இன முரண்பாடுகளுக்கு சமூகவலைத் தளங்களினூடாகப் பரப்பப்படும் விசமக் கருத்துக்களும் பொய்ப் பிரசாரங்களும் காரணமாக அமைகின்றன. இதற்குத் தீர்வாக பஞ்ச சீலக் கொள்கைக்கு ஏற்ப, உண்மையானதும் நம்பகரமானதுமான சில சமூகவலைத் தளங்களை அதிகாரபூர்வமாக உருவாக்கி, மக்கள்மயப்படுத்தலாம்.

- பல்கலைக்கழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட சங்கம் ஒன்றினை ஸ்தாபித்தல்.

பெரும்பாலும் பல்கலைக்கழகங்களில் ஒவ்வொரு மதங்களைக் கொண்ட மாணவர்களும், தமக்கென பிரத்தியேகமான தனியான சங்கங்களையே கொண்டுள்ளனர். உதாரணமாக: இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை, எடுத்து நோக்கினால் முஸ்லிம் மாணவர்களுக்கென - 'முஸ்லிம் மஜ்லிஸ்' கிறிஸ்தவ மாணவர்களுக்கு - "புச் பிரதஸ்- Buch Brothers and Good Shepherd Youth Society - SEUSL" சிங்கள மாணவர்களுக்கு - 'சிங்கள சாகித்ய சங்கம்", தமிழ் மாணவர்களுக்கு - தமிழ்ச் சங்கம் எனத் தனித்தனியான அமைப்புகள் உண்டு. எல்லா மாணவர்களையும் தத்தமது சமயத்தின் தனித்துவங்களைப் பேணியவாறு, அனைத்து சமயங்களிலும் பொதுவாக இருக்கின்ற கூறுகளை விளங்கிச் செயற்படுவதற்கும் பிற சமயங்களைப் புரிந்து கொள்வதற்கும் ஏற்றாற் போலான அமைப்பொன்று இல்லை. இந்நிலையில் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட சங்கம் ஒன்றைத் தோற்றுவிப்பதனூடாக அது சமூக நல்லிணக்கத்திற்கு பாரிய பங்களிப்புச் செய்ய முடியும்.

- பாடத்திட்டத்தில் மாற்றம் கொண்டுவரல்

இன்றுள்ள பாடத்திட்டத்தில் மதங்கள் சம்பந்தமான புரிந்துணர்வினை இலங்கை மாணவர்கள் க.பொ.த. (சா/த) மற்றும் உயர்தரத்தில் சமயப்பாடத்தில் மாத்திரமே சிறய அளவில் பெறக்கூடியதாக உள்ளது. இவ்வாறு இல்லாமல், பாடத்திட்டத்தில் தரம் 6ஆம் ஆண்டிலிருந்து பிற சமயக் கொள்கைகள், கலாசாரம், நடத்தைகள், சமய நல்லிணக்கம் மற்றும் அவற்றுக்கான முன்னோர்களின் சிறந்த நடைமுறைகள் போன்ற விடயங்கள் தெளிவுபடுத்தப்பட வேண்டும். சிறு வயதிலிருந்தே பிள்ளைகளுக்கு சமாதானக் கல்வி பயிற்சிகளினூடாக வழங்கப்படல் வேண்டும்.

## 8. உசாத்துணைகள்

அல் கஸ்ஸாலி, எம். (2009). *இஸ்லாமிய ஒழுக்க மாண்புகள்.* திருப்பூர்: திண்ணைத் தோழர்கள் பதிப்பகம்.

அன்வர், எம்.ஐ. (2018, February 4). *மது போதை வஸ்துப் பாவனையும் இன்றைய இளைஞர் சமுதாயமும்.* Retrieved March 1, 2021, from அறிவின் நுழைவாயில்: http://www.islamkalvi.com

அமீன், சி.எம்.எ. (2012). *இந்து, பௌத்தம் மற்றும் இஸ்லாம் - ஓர் ஒப்பீடு.* திஹாரிய: ரேஷ்மா பப்லிஷிங் ஹவுஸ்.

இஸ்மியா பேகம், எம்.எஸ்., & மஸாஹிர், எஸ்.எம்.எம். (2017). *இஸ்லாம் நம்பிக்கைகளும் கோட்பாடும்.* கொழும்பு: அல்ஹத.்.ப் வெளியீட்டகம்.

நாகராஜன், எஸ. (2017, December 2). *புத்தரின் போதனைகள;.* Retrieved November 15, 2020, from நக்கீரன்: http://www.nakkeran.com

புத்தபிரான். (2005). *தம்மபதம் அல்லது அறவழி.* சென்னை: வி. ஓ. சி. நூலகம்.

மஸாஹிர், எஸ்.எம்.எம்., & அப்ரா, எம்.ஐ.எப். (2021). *Evidence from பஞ்ச சீலம் மற்றும் இஸ்லாம் ஓர் ஒப்பீட்டாய்வு (five precepts) and Islam* Unpublished manuscript, South Eastern University of Sri Lanka.

ராமஸ்சுவாமி, பி. (2000). *தம்மபதம் (புத்த பெருமான் அருளிய அறநெறி).* சென்னை: முல்லை நிலையம்.

Edelglass, W. (2013, February). Buddhist Ethics and Western Moral Philosophy. Retrieved March 2, 2021, from http://www.researchgate.net

Fyre, R. (2012). Balkh... Encyclopedia of Islam. *Brill Online*. Retrieved February 15, 2021, from http;//www.referenceworks.brillonline.com

Gosthrapathi Dodam Pahala Shri Raahula Himi. (2012, October 08). *Pansil gena avabodaya nethikama getaluvak.* Retrieved February 10, 2021, from Budusarana: http://www.budusarana.lk

Gokaru, S. (2013, December). A Comparative study of the concept of God in Islam and Buddhism. Retrieved November 26, 2020, from http://www.researchgate.net

Groves, P., & Farmer, R. (1994). Buddhism and Addiction. *Addiction Research and Theory*. Retrieved December 1, 2020, from http://researchgate.net

Mawarala Buddiya Thero. 2020.March,26. FbVedio. Deshanaya; Buddha Puthun

Nayanika, V. (2020, January). The Buddhist Approach to Establish Peace though five Precepts. *International Jounal of Science and Research*. Retrieved January 29, 2021, from http://www.ijsr.net

Razik, A. S., Long, A. S., & Salleh, K. (2018). Buddhist View on Muslim Socio-Culture in Post War Context of Sri Lanka. *Srilankan Journal Arabic and Islamic Studies*. Retrieved November 20, 2020, from http://www.seu.ac.lk

Razik, A. S., & Rushana, A. (2018). Proublems faced by converts to Islam in Sri lanka; A Study Based on Aniuradapura Distric. *5th International Symposium* . Retrieved November 22, 2020, from http://www.sarjoonra@seu.ac.lk

Riyaz, A. (2018). Buddhist Ethics of Pancha Sila; Solution to the Present Day and Future Proublem. Retrieved December 10, 2020, from http://www.researchgate.net

Salleh, M. (2015, November). Introduction to Islam. Retrieved January 10, 2021, from http://www.researchgate.net

See. H, P. (2008, July). Buddhism and Islam; Comperison and Dialouge. *Berjaya University Collage*. Retrieved November 20, 2020, from http://www.researchgate.net

Tanissaro Bikkhu. (2005). The five precepts – Panca sila. *Path of freedom*. Retrieved December 15, 2020,

from http://www.accesstoinsight.org

Uthaphun, P. (2017). A Comparative study of Sila (five Precepts) in Theravada Buddhism and Jainism. *Journal of MCU Buddhism Review*. Retrieved March 5, 2021, from http://www.researchgate.net

Warren, J. (2020, April). Applying Buddhist Practices to Recovery; What I Learned from skiing a Little Buddha Wisdom. *Journal of Addiction & Offender Counselling*. Retrieved November 20, 2020, from http://www.researchgate.net